<u>சுருக்கம்</u>

பொது விநியோகத் திட்டம் – மண்ணெண்ணெய் – புதிதாக வழங்கப்பட்டுள்ள தகுதியுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அக்டோபர் 2008 மற்றும் நவம்பர் 2008 ஆகிய இரு மாதங்களுக்கு மட்டும் கூடுதலாக ஒரு லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சி2) துறை**

**அரசு ஆணை(டி) எண்: 325** **நாள்: 20–9–2008**

**படிக்கவும் :**

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கடிதம் எண்.ஒ2/32600/2008 நாள் 11–9–2008.

----

**<u>ஆணை:</u>**

அரசாணை (டி) எண்.268, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 31–7–2008–ல், ஒரு சிலிண்டர் மற்றும் சிலிண்டர் இணைப்பு இல்லாத தகுதியுள்ள புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆகஸ்ட் 2008 மற்றும் செப்டம்பர் 2008 ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் ஏற்கனவே அரசு நிர்ணயித்துள்ள வழக்கமான விநியோக அளவுடன் கூடுதலாக ஒரு லிட்டர் மண்ணெண்ணெயை அதாவது தலா 3 லிட்டர் வீதம் 1–8–2008 முதல் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் தனது கடிதத்தில், மைய அரசின் நடப்பு காலாண்டு ஒதுக்கீட்டில் ஜுலை 2008 முதல் செப்டம்பர் 2008 வரை மாதாந்திர ஒதுக்கீடு வழங்கியது போக 8,388 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் மீதம் உள்ளதாகவும், இதனை இம்மாத இறுதியில் முன் ஒதுக்கீடாக (Storage allotment) வழங்கப்பட உள்ளது எனவும் ஆணையர் கூறியுள்ளார். இந்நிலையில் மேற்கூறிய 8,388 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் அளவினைக் கொண்டு தகுதியுள்ள புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கு 1–8–2008 முதல் வழங்கப்பட்டு வரும் 3 லிட்டர் மண்ணெண்ணெய் தொடர்ந்து அக்டோபர் 2008 மற்றும் நவம்பர் 2008 ஆகிய இரண்டு மாதங்களுக்கும் வழங்கிட இயலும் என ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. எனவே, ஆணையர் தனது கடிதத்தில், ஒரு சிலிண்டர் மற்றும் எரிவாயு இணைப்பு இல்லாத தகுதியுள்ள புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆகஸ்ட் 2008 மற்றும் செப்டம்பர் 2008 மாதங்களுக்கு தலா 3 லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்க உத்தரவிட்டுள்ளதை அக்டோபர் 2008 மற்றும் நவம்பர் 2008 ஆகிய இரண்டு மாதங்களுக்கும் நீட்டித்து வழங்கிட அரசின் ஆணையினை வேண்டியுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையரின் பிரேரணையை ஏற்று, ஒரு சிலிண்டர் மற்றும் சிலிண்டர் இணைப்பு இல்லாத, தகுதியுள்ள, புதிதாக வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும், அக்டோபர் 2008 மற்றும் நவம்பர் 2008 ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் ஏற்கனவே அரசு நிர்ணயித்துள்ள வழக்கமான விநியோக அளவுடன், கூடுதலாக ஒரு லிட்டர் மண்ணெண்ணெயை, அதாவது தலா மூன்று லிட்டர் வீதம் வழங்கிடலாம் என அரசு இதன் மூலம் ஆணையிடுகிறது.

4. இதுதொடர்பாக உடன் மேல்நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மற்றும் இதுகுறித்து போதிய விளம்பரங்கள் செய்ய தக்க மேல்நடவடிக்கை எடுக்குமாறும் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஒம்/...**
**(க.சண்முகம்)**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை, சென்னை–600 005.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், கீழ்ப்பாக்கம், சென்னை–600 010.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை–600 010.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலமாக),
மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.
தேசிய தகவல் மையம், சென்னை–600 009.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை,
சென்னை–600 009.(இச்செய்தியை பத்திரிகைகளில் வெளியிட)
இருப்புக் கோப்பு .